# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),**

**முறையீட்டு மனு எண்.76/2017/பே**

**ஆணை எண். 48 /2018 நாள் .09–03–2018**

**திரு. எம். ராஜசேகரன்,**
**27/8 கிழக்குத் தெரு,**
**பொத்தனூர் அஞ்சல்,**
**நாமக்கல் மாவட்டம். -- முறையீட்டு மனுதாரர்.**

**செயல் அலுவலர்,**
**பரமத்தி வேலூர் தேர்வு நிலை பேரூராட்சி,**
**நாமக்கல் மாவட்டம். -- எதிர் மனுதாரர்**

**ஆணை**

திரு எம். ராஜசேகரன், 27/8 கிழக்குத் தெரு, பொத்தனூர் முறையீட்டு மனுதாரரின் 06.04.2017ம் நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 10.04.2017 அன்று பெறப்பட்டது. முறையீட்டு மனு 76/2017 எனபதியப்பட்டது. மேற்படி மனு மீது உரிய அறிக்கைகள் பெறப்பட்டு பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் விவரப்படி ஆணை வெளியிடப்படுகிறது.

திரு எம். ராஜசேகரன், தனது முறையீட்டு மனுவில், நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் இயங்கும் பாரதி ஸ்டோர்ஸ் நிறுவனம், மேற்படி பேரூராட்சியில் இயங்கும் இடம், மேற்படி இடத்திற்கான பெயர் பலகைகள் உள்ள விவரம் மற்றும் மேற்படி பாரதி ஸ்டோர்ஸ் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட கட்டிட உரிமம், தொழில் நிறுவனத்திற்கான உரிமம், நிறுவனத்தில் உள்ள தொழிலாளர்களிடமிருந்து பிடித்தம் செய்யப்படும் தொழில் வரி போன்ற விவரங்களை பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரியதாகவும், மேற்படி மனுதாரரால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு விடையளித்து அதற்கான ஆவணங்கள் இல்லை எனவும், தேட இயலவில்லை எனவும் பேரூராட்சி செயல் அலுவலர், பரமத்தி வேலூர் (தேர்வு நிலை)

தெரிவித்ததாக தெரிவித்து தனது புகார் மனுவினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 17.04.2017ம் நாளிட்ட அறிவிப்பாணை மூலம் மேற்படி புகார் மனுவிற்கான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்க வேலூர் பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

வேலூர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது கடித ந.க.எண்.38/2017/நாள் 27.06.2017ன் மூலம் தனது அறிக்கையினை கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள M/s. பாரதி ஸ்டோர்ஸ் நிறுவனம், வேலூர் பேரூராட்சியில் இருபது ஆண்டுகளுக்கும் மேலாக இயங்கி வருவதாகவும், மேற்படி கட்டிடத்திற்கு கட்டிட உரிமம் எப்போது வழங்கப்பட்டது என்ற விவரம் தொடர்பான ஆவண நகல்கள் ஏதும் பேரூராட்சி அலுவலகத்தில் கிடைக்கப்பெறவிலலை எனவும் தெரிவித்துள்ளார். மேலும் பாரதி ஸ்டோர்ஸ் நிறுவனத்திடமிருந்து 2017–18 ஆண்டுக்கான தொழில் உரிமக் கட்டணமாக ரூ.1700/– கடந்த 21.02.2017 மற்றும் 24.02.2017ல் வசூலிக்கப்பட்டதாகவும், தொழில் வரியாக 2016–17ம்ஆண்டிற்கு ரூ.2,500/– வசூலிக்கப்பட்டுள்ளதாகவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தற்போது மேற்படி நிறுவனத்தில் பணிபுரியும் பணியாளர்களின் ஊதிய விவரம் கோரி பேரூராட்சி மூலம் சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதைத் தவிர மேற்படி பேருராட்சி பகுதியில் உள்ள அனைத்து வணிக நிறுவனங்களிடமிருந்தும் விடுதலின்றி பணியாளர்கள் விவரம் பெற வரித் தண்டலர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து இம்முறைமன்ற நடுவ 22.08.2017ம் நாளிட்ட அறிவிப்பாணயில் மேற்கண்ட அறிக்கை முழு அளவில் இல்லாததை சுட்டிக்காட்டி முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனுவில் குறிப்பிட்டுள்ள புகார்களுக்கான முழு விவர அறிக்கையினை இரண்டு வார காலத்திற்குள் சமர்ப்பிக்க வேலூர் பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

இம்முறைமன்ற நடுவ 25.09.2017ம் நாளிட்ட அழைப்பாணையில் இப்பொருள் தொடர்பாக தனது விளக்கத்தினை பதிவு செய்ய இம்முறைமன்ற நடுவத்தில் 06.12.2017 அன்று நேரில் ஆஜராக வேலூர் பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

நாமக்கல் மாவட்டம், வேலூர் பேரூராட்சி செயல் அலுவலர் இம்முறைமன்ற நடுவத்தில் 06.12.2017 அன்று நேரில் ஆஜராகி தனது வாக்குமூலத்தினை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"........தான் 29.06.2017 முதல் பரமத்தி வேலூர் பேரூராட்சி செயல் அலுவலராக இருப்பதாகவும், 06.07.2017ம் நாளிட்ட திரு இராஜசேகரனுடைய முறையீட்டு மனு விவரம் தனக்கு தெரியும் என குறிப்பிட்டுள்ளார். மனுதாரர் குறிப்பிட்டுள்ள திருவாளர்கள் பாரதி ஸ்டோர்ஸ் நிறுவனம், வேலூர் பேரூராட்சியில் 20 ஆண்டுகளுக்கும் மேலாக இயங்கி வருவதாகவும் கட்டிட உரிமம் எப்போது வழங்கப்பட்டது என்ற விவரம் பேரூராட்சி அலுவலகத்தில் கிடைக்கப்பெறவில்லை எனவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

பாரதி ஸ்டோர்ஸ நிறுவனத்தில் 3 நபர்கள் பணி புரிவதாகவும், தொழில் உரிமக் கட்டணமாக ரூ.1200/– கடந்த 24.02.2017 ல் வசூலிக்கப்பட்டதாகவும், 2016–17 ம் ஆண்டில் தொழில் வரி ரூ.2200/–வசூலிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். இந்த வணிக நிறுவனங்கள் தவிர அனைத்து வணிக நிறுவனங்களுக்கும் தொழில் வரி விதிப்பது தொடர்பாக உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனம் இயங்கி வரும் கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி பெறப்பட்டதா என்ற விவரம் அலுவலகத்தில் இல்லாததால் சம்பந்தப்பட்ட நபரிடமிருந்து கேட்டு பெற்று 10 நாட்களுக்குள் அனுப்பிவைப்பதாக தெரிவித்துள்ளார். மேலும் வருடா வருடம் பிப்ரவரி மாதம் 28ம் தேதிக்குள் அனைத்து நிறுவனம்/கடைகளுக்கான தொழில் உரிமக் கட்டணம் செலுத்தி புதுப்பித்துக் கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும், திரு இராஜசேகரன், மனுதாரர் நாமக்கல் மாவட்டத்தில் வேலூார், பொத்தனுார், பாண்டமங்களம், பரமத்தி போன்ற பேரூராட்சிகளில் தொடர்ந்து மனு அனுப்பும் வழக்கத்தினை கொண்டுள்ளார் எனவும் பேரூராட்சி செயல் அலுவலர், வேலூார் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

நாமக்கல் மாவட்டம் வேலூார் பேரூராட்சி செயல் அலுவலரின் கடித எண் 38/2017/நாள் 21.12.2017ன்படி மேற்படி பாரதி ஸ்டோர்ஸ் நிறுவனத்திற்கு கட்டிட அனுமதி வழங்கப்பட்ட விவரம் மேற்படி நிறுவனத்தின் உரிமையாளரிடமிருந்து பெறப்பட்டதாகவும் அதில் மேற்படி நிறுவனங்களுக்கு வேலூார் பேரூராட்சியின் கட்டிட வரைபட அங்கீகார எண் 1601/1987 நாள் 31.12.1987ன்படி கட்டிட அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அதற்கான வரை பட ஒளி நகலுடன் சேர்த்து சமர்ப்பித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 02.02.2018ம் நாளிட்ட அறிவிப்பாணையில் நாமக்கல் மாவட்டம், வேலூார் பேரூராட்சி வார்டு எண் 13, வடக்குத் தெருவில் இயங்கி வரும் பாரதி ஸ்டோர்ஸ் நிறுவனத்திற்கான வரைபட அனுமதி வழங்கியமைக்கான ஆவணங்களின் அடிப்படையில் மேற்படி நிறுவனத்திற்கு தொழில் வரி விதிக்கப்பட்டது சம்பந்தமாகவும், விதிக்கப்பட்ட தொழில் வரி நாளது தேதி வரை நிலுவையில்லாமல் செலுத்தப்பட்டுள்ளது குறித்த விவரத்தினை தெரிவிக்க வேலூார் பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

வேலூர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது கடித எண் 38/2017/நாள் 14.02.2018ம் தேதியிட்ட அறிக்கையில், நாமக்கல் மாவட்டம், வேலூார் பேரூராட்சி, 13 வது வார்டு வடக்குத் தெருவில் இயங்கி வரும் பாரதி ஸ்டோர்ஸ் நிறுவனத்திற்கு 1988–89ம் ஆண்டு சொத்து வரி விதிப்பு எண் 5326 முதல் 5332 என 7 எண்கள் விதிக்கப்பட்டதாகவும் 1988–89 முதல் 2007–2008 முடிய சொத்து வரி நிலுவை இல்லை எனவும், 2008–2009 முதல் 2017–2018 முடிய உள்ள காலத்திற்கு வருட வாரியாக விதிக்கப்பட்ட சொத்து வரி, மேற்படி சொத்து வரி செலுத்தப்பட்ட நாள் குறித்த விவரத்தினை பட்டியலிட்டு இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்துள்ளார். இதன்படி மேற்படி நிறுவனம் 2017–18 முடிய விதிக்கப்பட்ட 7 எண்களுக்கான சொத்து வரி விதிப்பினை முழுமையாக செலுத்தியுள்ளது செயல் அலுவலரால் உறுதி செய்யப்பட்டுள்ளது..

முறையீட்டு மனுதாரர் நாமக்கல் மாவட்டம், வேலூர் பேரூராட்சிப் பகுதியில் இயங்கி வரும் பாரதி ஸ்டோர்ஸ் நிறுவனம் தொடர்பான விவரங்களை மேற்படி பேரூராட்சி செயல் அலுவலரிடம் தகவல் பெறும் உரிமை சட்டத்தின் கீழ் கோரியுள்ளார். மனுதாரர் கோரியுள்ள விவரங்களை வழங்காத நிலையில் இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார். மனுதாரர் தகவல் அறியும் உரிமை சட்டப் பிரிவுகளின்படி தகவல்களுக்கு சம்பந்தப்பட்ட மேல்முறையீட்டு அலுவலரையே அணுகிட வேண்டுமே தவிர தகவல்கள் வழங்கப்படாதது குறித்து தகவல் அறியும் சட்டத்தின் கீழ் இம்முறைமன்ற நடுவத்திற்கு மேல் முறையீடு செய்ய வழிவகை இல்லை. இருப்பினும் புகாரில் குறிப்பிட்டுள்ள நிறுவனத்திற்கு பேரூராட்சி கட்டிட அனுமதி, சொத்து வரி விதிப்பு தொடர்பான விளக்க அறிக்கைகள் பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரி பெறப்பட்டுள்ளன. அதன்படி மேற்படி பேரூராட்சியில் இயங்கிவரும் புகாரில் குறிப்பிட்டுள்ள பாரதி ஸ்டோர்ஸ் நிறுவனத்திற்கு 1987ம் ஆண்டு கட்டிட அனுமதி வழங்கப்பட்ட விவரம், மேற்படி நிறுவனத்திற்கு விதிக்கப்பட்ட சொத்து வரி மற்றும் அவை செலுத்தப்பட்ட விவரம் ஆகியன பேரூராட்சி செயல் அலுவலரால் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்பபிக்கப்பட்டுள்ளது.

எனவே இப்பொருள் மீதான தொடர் நடவடிக்கை கைவிடப்படுவதென முடிவெடுத்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018 ம் ஆண்டு மார்ச் திங்கள் 09-ஆம் நாளன்று என்னால் கையாப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

--//உத்திரவின்படி – அனுப்பப்படுகிறது//--

செயலாளர்.

பெறுநர்

1.திரு. எம். ராஜசேகரன்,
27/8 கிழக்குத் தெரு,
பொத்தனூர் அஞ்சல்,
நாமக்கல் மாவட்டம்.

2. செயல் அலுவலர்,
வேலூர் தேர்வு நிலை பேரூராட்சி,
நாமக்கல் மாவட்டம்.

3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
சேலம் மண்டலம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
சேலம்.